**தலைப்பு 211 – அரசாங்க அச்சகத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் படி பெறுமதி சேர் வரித் தொகை ரூபா 393,097,856 ஆனதுடன் திறைசேரிப் புத்தகத்தின் படி அது ரூபா 386,494,948 ஆனமையால் பெறுமதி சேர் வரித் தொகை ரூபா 6,602,908 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிச் செலாற்றல் கூற்றிலுள்ள வேறுபாடானது பெறுவனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 393,097,856 தொகையிலுள்ள பெறுமதிசேர் வரித் தொகையையும் கடந்த ஆண்டுகளிற்குரிய கட்டுநிதி தீர்ப்பனவுத் தொகையையும் உள்ளடங்கியுள்ளது. | சரியான பெறுமதி களை கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றின் படி பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 6,947,387 ஆனதுடன் திணைக்களப் புத்தகத்தின் படி அந்த மீதி ரூபா 37,695,022 ஆனமை யால் ரூபா 30,747,635 வேறுபாடு காணப்பட்டது. | பெறுமதிசேர் வரிக் கட்டுப் பாட்டுக் கணக்குப் பெறுவனவு களாக பதிவு செய்யப்படுகின்ற மொத்தப் பெறுமதியும் கணக் கீடு செய்யப்படுவதில்லை. அனுமதிக்கப்பட்ட பெறுமதிகள் மாத்திரமே CIGAS இன் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. | சரியான பெறுமதி களை கணக்கீடு செய்தல் வேண் டும். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளிற்குரிய நிலுவை வருமானம் ரூபா 166,058,339 ஆனதுடன் அதில் எவ்விதத் தொகையும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2010 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான மொத்த வருமான நிலுவையில் மீளாய்வாண்டின் போது 6 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | இந்த நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு குறித்த நிறுவனங்க ளிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள துடன், அதற்கமைய நிலுவைப் பணம் சேகரிக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகை களை அறவிடுவதற் காக பொருத்தமான தும் விரைவானதுமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 (ii) மற்றும் (iii) இற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் 18 செலவின விடயங்களிற் குரிய ரூபா 53,457,000 மொத்தமான நிதி ஏற்பாடு 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் - 19 நோய்த்தொற்று காரணமாக எதிர்பார்த்த செலவின ங்களை செய்வதற்கு முடியாமல் போனமையே இவ்வாறு சேமிப்புக்கள் ஏற்படுவதற்கு காரணமாகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழங்குனர்களிற்காக 2021 ஆம் ஆண்டில் செலுத்திப்பட்ட ரூபா 5,516,869 தொகை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களால் பொறுப்புக் கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள கொடுப்பனவுகளை 2021 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியிருந் தமை. | பொறுப்புக்களை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.4 அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் மீதான கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர் களிடமிருந்தும் பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் மரணித்த 05 உத்தியோகத்தர் களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 701,065 தொகையை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | இந்தக் கடன் தொகைகளை அறவிடுவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி இந்த கடன் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 2.5 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2 ஆண்டுகளைக் கடந்த மொத்தம் ரூபா 18,379,027ஆன 30 வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தக அச்சிடுதல்களுக்காக கிடைக்கின்ற வருமானங்கள் தற்காலிகமாக இந்தக் கணக் கில் வைக்கப்பட்டுள்ளன. இதுவரை அந்த அச்சிடுதல் கள் முடிவடையவில்லை. அச்சிடுதல்கள் முடிவடைந்த பின்னர் வைப்புக் கணக்கிலிருந்து அகற்றப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் குறித்த வருமான ங்கள் அரசாங்க வருமா னத்திற்கு எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) பெறுமதிசேர் வரிவிதிப்பு சதவீதம் மாற்றமடைந்தமை காரணமாக உள் நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படாத ரூபா 32,570 தொகை ஓராண்டிற்கும் மேலாக வைப்புக்கள் கணக்கில் வைக்கப்பட்டு ள்ளது. | இந்த தொகையை தீர்ப்பதற்கு வைப்புச் செய்யப்பட்ட நிறுவன த்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஓரளவு தொகை தீர்க்கப்பட்டு ள்ளதுடன், எஞ்சிய தொகை யை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்தத் தொகையை தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப் படுதல் வேண்டும். |

### 2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | திணைக்களத்திற்கு நியமிக்க ப்பட்டுள்ள உள்ளகக் கணக் காய்வாளரைக் கொண்டு திணைக்களத்தின் பிரிவுகள் சுதந்திரமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இனங்காண ப்படுகின்ற | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கா ய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடி க்கை எடுக்கப்ப டல் வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள் வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பலவீனங்கள் திருத்தப்பட்ட பின்னர், காலாண்டுதோறும் நடாத்தப்ப டுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் வெற்றிகரமான தன்மை மதிப்பிடப்பட்டு நிதி மற்றும் செயலாற்றலை மதிப்பிடுவ தற்காக தயாரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற கணனி முறை மைக்கு உட்படுத்துவதற்கு திணைக்களத் தகவல்களை வழங்குதல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 05 ஆந் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்காக பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 413,233,363 இற்கு வாக்குச் சீட்டுப் புத்தகங்கள், இரட்டை வாக்குச் சீட்டுப் புத்தகங்கள், படிவங்கள் போன்றன தேர்தல் ஆணையாளருக்காக அச்சிடப்பட்டி ருந்தன. இந்த அச்சிடும் பணிகள் தொடர்பான அனைத்து மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களை ஈடுசெய்ய, மீளாய்வாண்டில் ரூபா 3.24 பில்லியன் நிதி ஏற்பாட்டை திறைசேரி வழங்கியிருந்த போதிலும், ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்விதக் காரணமும் இன்றி மொத்த பொருள் மற்றும் ஊழியக் கிரயமான ரூபா 318,852,904 தொகையில் 20 சதவீதமும் மொத்தக் கிரயத்தில் 9 சதவீதமும் என்ற வகையில் மொத்தம் ரூபா 75,721,385 தொகை விலைப்பட்டியலில் சேர்க்கப்பட்டு தேர்தல் ஆணையத்திடம் இருந்து பணம் பெறப்பட்டிருந்தது. அச்சடிப்பு விலைப் பட்டியலின் பெறுமதி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டில், திணைக்கள த்தின் 24 பதவிநிலை உத்தியோகத்தர் களுக்கு வர்த்தக அச்சடிப்பு கொடுப்பனவாக ரூபா 2,068,861 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அன்று முதல் இன்று வரை கிரயமிடலின் போது இவ் வாறு மொத்தப் பொருட் கிரயத்திலும் ஊழியக் கிரயத்திலும் 20 சதவீதப் பெறுமதி பட்டியலிற்கு சேர்க்கப்படுகின்றது. பொருள் கையாளல் கட்டணமாக (MATERIAL HANDLING CHARGES) மொத்தப் பொருட் கிரயத்தில் 10 சதவீதம் சேர்க்கப்படுகின்றது. | திணைக்களத்தின் அனை த்து மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங் களை ஈடுசெய்ய, திறை சேரியினால் நிதி ஏற்பாடு வழங்கப்படுகின்றமையால் பட்டியல் பெறுமதியை அதிகரித்து கொடுப்பனவு களைப் பெற முடியாது. |

| | | |
|---|---|---|
| (ஆ) திணைக்களத்தின் அவசர அச்சிடும் பணிகளுக்கான சில வேலைகளுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு பதிலாக துண்டு வேலைக்கு பணம் செலுத்தும் முறைக்கு 1981 திசெம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2009 செப்டம்பர் 11 ஆந் திகதி கூடிய பொதுக் கணக்குகள் குழுக் கூட்டத்தில், இந்த ஊழியர் ஊக்குவிப்புக்காக வழிமுறை ஒன்றை வகுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் வரை அந்தப் பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தின் பதவிய ணியினருக்காக செலுத்தப் படுகின்ற படிகள் தொடர் பில் அறிக்கை தயாரிக்கும் செயற்பாடுகள் தற்போது முடிவடைந்துள்ளதுடன் எதிர்வரும் இரண்டு வாரங்களில் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவி யணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். | 2009 ஆம் ஆண்டில் பொதுக் கணக்குகள் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரையின் படி நடவ டிக்கை எடுக்கப்பட்டு பொருத்தமான கொடுப் பனவு முறையொன்று துரிதமாக அறிமுகப்படுத்த ப்படுதல் வேண்டும். |
| (இ) மேற்கூறிய அமைச்சரவை முடிவை மீறி துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவு செலுத்துகின்ற காலத்தில் நாளாந்தம் 2 மணித்தியாலம் வரை மேலதிகநேரப் படி மற்றும் விடுமுறைகாலப் படி என்ற வகையில் ரூபா 150,804,766 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | தொழிற்சாலைக்கு சேவை க்கு வருகை தரும் ஊழியர்கள் குறைவாகக் காணப்பட்டமையால் இவ் வாறு மேலதிகநேர மற்றும் துண்டுக்கூலி அடிப்படை யில் கொடுப்பனவு செய்யப் படுகின்றது. | உரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஈ) 2018 யூலை 02 ஆந் திகதிய EST/7/ ALLOW/03/0120 ஆம் இலக்க பொது நிர்வாக முகாமைத்துவ மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் தானப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தேசிய சம்பளம் மற்றும் பணியாளர்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு அச்சகத் திணைக்களத்தின் பதவியணியினருக்கு இறுதியாக கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதிய கடிதத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2018 ஆம் ஆண்டு வரை மட்டுமே கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிரு ந்தது. இருப்பினும், 2020 ஆம் ஆண்டில், எந்த ஒப்புதலும் இல்லாமல் ரூபா 436,781,954 செலுத்தப்பட்டிருந்தது. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான கொடுப் பனவுகளைச் செலுத்துவ தற்குத் தேவையான அங்கீ காரத்தைக் கோரி 2019 யூன் 10 மற்றும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி களில் தாபனப் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி கிடைக்கும் வரை கொடுப்பனவுகள் செலுத் தப்பட்டுள்ளன. | செலவுகளை செய்வதற்கு முன்னர் உரிய அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |
| (உ) 2019 மார்ச் 28 ஆந் திகதிய EST/ ALLOW/03/0720 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது கடிதத்தின் படி பயிலுனர் உத்தியோகத்தர்களிற்கு பயிற்சிக் காலத்தில் நாளாந்தப் படியாக ரூபா 700 மாத்திரம் செலுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தின் நிரந்தர உத்தியோகத்தர்களிற்கு உரித்தான | சேவை தேவைப்பாட்டின் நிமித்தம் இவ்வாறு படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுக ளின் படியே கொடுப்பன வுகள் செலுத்தப்பட வேண்டும். |

மேலதிகநேர மற்றும் துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவாக ரூபா 7,162,261 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிரந்தர அடிப்படையிலும் பதிற்கடமை அடிப்படையிலும் உதவி அரசாங்க அச்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ள 10 பிரிவுகளிற்காக விசேட காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படாது வேலை முதல்வர்கள், வேலை பார்ப்பவர்கள் மற்றும் பதிற் கடமையாளர்கள் என்ற அடிப்படையில் குறித்த பிரிவுகளிற்கு உதவி அரசாங்க அச்சகர்கள் மீளாய்வாண்டில் நியமிக்கப்பட்டிருந்தனர். | இந்த நியமனங்களை இரத்துச் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்வாறு முறையற்ற விதத்தில் நியமனங்கள் வழங்கப்படக் கூடாது. |